Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 239

வியாழக்கிழமை
24 ஜூலை 2025

ஆடி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## கறுப்பு ஜூலை நாளில் சகோதரத்துவக் குழு யாழில் குத்தாட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24
தமிழர்களின் குருதிக் கறை படிந்த கறுப்பு ஜூலை தினமான நேற்று, தென்னிலங்கையில் இருந்து ரயிலில் வந்த சகோதரத்துவக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் குத்தாட்டம் போட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் 11

# அடுத்த வருடமே மாகாணத்தேர்தல்



## பின்வாங்கியது திசைகாட்டி அரசாங்கம்

கொழும்பு, ஜூலை 24
**2026** ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே மாகாணசபைத் தேர்தல்கள் இடம்பெறும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 11

## கறுப்பு ஜூலை கலவரத்தை ஒருபோதும் மன்னிக்கோம்!

### யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
கறுப்பு ஜூலைக் கலவரங்களில் கொல்லப்பட்டோருக்கான 42ஆவது அஞ்சலி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் நேற்றுமாலை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டன.
தமிழ்த்தேசியப் பேரவையின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு அருகில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.
மூத்த எழுத் 11

## நாட்டில் ஏற்பட்ட அழிவுக்கு கறுப்பு ஜூலையே காரணம்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க வெளிப்படை

கொழும்பு, ஜூலை 24
ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்படுத்தப்பட்ட கறுப்பு ஜூலைக் கலவரங்கள் எமது நாட்டுக்கு ஏற்பட்ட சாபக்கேடாகும். எமது நாடு அழிந்துபோனமைக்கு கறுப்பு ஜூலைக் கலவரங்களே காரணம் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். 11

## தவறான முடிவெடுத்து முதியவர் உயிரிழப்பு!

யாழ்., ஜூலை 24
யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய முதியவர் ஒருவர் தவறான 11

## சம்பூரில் அகழ்வாய்வு தேவையா? அறிக்கை கோரியது நீதிமன்று!

யாழ்ப்பாணம், ஜூலை 24
சம்பூரில் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமா? இல்லையா? என்பது தொடர்பில் அறிக்கை வழங்குமாறு மூதூர் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.
சம்பூரில் கடந்த 19ஆம் திகதி மிதிவெடி அகற்றும் குழுவினர் பணியில் ஈடுபட்டபோது, மண்டையோடு உள்ளிட்ட மனிதச் சிதிலங்கள் சில மீட்கப்பட்டன. இந்த விடயம் மூதூர் நீதவான் நீதிமன்றத்தின் கவனத் 11



## அரசியற்கைதிகளின் விடிவுக்காக கிட்டு பூங்காவில் இன்று விடுதலை நீர் சேகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 24
அரசியற் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், சிறைச்சாலைகளில் கொல்லப்பட்ட அரசியற் கைதிகளுக்கு நீதிகோரியும் யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் இன்று பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.
இதன்படி, இன்று காலை 10 மணிக்கு 'துருவேறும் கைவிலங்கு' என்ற ஆவண 11

## செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று ஐந்து என்புத்தொகுதிகள்

### இதுவரை 85 என்புத்தொகுதிகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
அரியாலை - செம்மணிப் புதைகுழியில் நேற்று 5 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதையடுத்து, இதுவரை 11

## நேற்றுமுன்தின அகழ்வில் அவதானிக்கப்பட்டது பாலூட்டும் போத்தலே!

யாழ்ப்பாணம், ஜூலை 24
செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று முன்தின அகழ்வின்போது, குழந்தைக்குப் பாலூட்டும் போத்தலையொத்த (பாற் போச்சி) பொருளொன்று அவதானிக்கப்பட்ட நிலையில், அது 11



### முச்சந்தி முரளி

'பித்தம் தலைக்கேறினவைதான் இப்பிடியொரு கறுப்புநாளிலயும் குத்தாட்டம் போடுவினம் கண்டியளோ'

## பிள்ளையானின் மனு; விசாரணை தொடரும்! நீதிமன்றம் முடிவு

கொழும்பு, ஜூலை 24
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் பிள்ளையான் தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை, 11

## வடக்குக் கடற்பரப்பில் கொந்தளிப்பான நிலை

### மீனவர்களே அவதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 24
வடமாகாணக் கடற்பரப்பு கொந்தளிப்புடன் காணப்படும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது. 11



## ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மாவிட்டபுரம் கந்தனுக்கு நேற்றுத் தேர்த்திருவிழா!

யாழ்ப்பாணம், ஜூலை 24
'அபிஷேகக் கந்தன்' எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுப் புதன்கிழமை மிகவும் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெற் 11

## தலைமை நீதிபதியாக பிரீத்தி பத்மன் சூரசேன

### ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அரசியலமைப்புச்சபை ஒப்புதல்

கொழும்பு, ஜூலை 24
இலங்கையின் தலைமை நீதிபதியாக உச்ச நீதிமன்ற நீதிபதி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 23.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4141
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 18 40 49 79
விசேட எழுத்து V

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 23.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1208
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 13 16 20 35

**NLB ஜய**
திகதி 23.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0167
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 2 4 2 6

**மெகா பவர்**
திகதி 23.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2247
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 16 31 46 49

**மஹஜன சம்பத**
திகதி 23.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5899
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 7 6 2 7 5 4

**தன நிதானய**
திகதி 23.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1929
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 08 27 35 68
விசேட எழுத்து O

**அத சம்பத**
திகதி 23.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0474
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 2 7 5 4

**சுப தவசக்**
திகதி 23.07.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0015
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 02 32 35 52

# வடக்கில் தே.ம.சக்தி ஆழமாகக் காலூன்றும்

## பிமல் ரத்நாயக்க நம்பிக்கை

**கொழும்பு, ஜூலை 24**

**தேசிய மக்கள் சக்தி வடக்கிலும் ஆழமாகக் காலூன்றும். வெளியில் இருந்து தலைவர்களை ஏற்றுமதி செய்யமாட்டோம். வடக்கு மண்ணில் இருந்தே சிறந்த தலைவர்களை உருவாக்குவோம் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் தெற்கில் பல வருடங்கள் அரசியலில் ஈடுபட்டோம். வடக்கில் அவ்வாறு செய்யவில்லை. 2010ஆம் ஆண்டில் இருந்துதான் வடக்கில் செயற்பட ஆரம்பித்தோம். எனினும், ராஜபக்ச ஆட்சியில் அதற்குரிய சுதந்திரம் இருக்கவில்லை. லலித், குகன் சகோதரர்கள் கடத்தப்பட்டனர். தோழர் சுனில் ஹந்துனெத்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இப்படியான சூழ்நிலையே அன்று இருந்தது.

2015ஆம் ஆண்டிலிருந்து செயற்பட ஆரம்பித்தோம். ஜனாதிபதித் தேர்தலை விடவும் பொதுத் தேர்தலில் எமக்குப் பேராதரவு கிடைத்தது. உள்ளாட்சி சபைத் தேர்தலிலும் எமக்கு ஆதரவு கிடைத்தது. தமிழ்க் கட்சிகள் எனக் கூறிக்கொள்ளும் சில தரப்புகள் தமிழ் ராஜபக்சக்களாக செயற்பட்டு, இனவாதம் பரப்பின. காணி விவகாரத்தையும் கையில் எடுத்தன. எனவே, உள்ளாட்சிசபைத் தேர்தலில் எமக்கு வடக்கில் பின்னடைவு ஏற்பட்டது என்று நாம் கருதவில்லை. யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 81 உறுப்பினர்கள் உள்ளாட்சிமன்றங்களில் உள்ளனர்.

வடக்கில் ஆழமாகக் காலூன்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி முயற்சிக்கும். வடக்குக்குத் தலைவர்களை ஏற்றுமதி செய்யமாட்டோம். அந்த மண்ணில் இருந்து சிறந்த தலைவர்களை உருவாக்குவோம் - என்றார். (எ-44)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 23.07.2025 | புதன்கிழமை | 0607 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| S | 2 1 1 0 3 5 |

**Super Ball**

| திகதி | தினம் |
|---|---|
| 23.07.2025 | புதன்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2873 | Q | 28 42 47 60 |

**சனிதா**

| திகதி | தினம் |
|---|---|
| 23.07.2025 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| V | 01 03 22 40 | 5033 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் |
|---|---|
| 23.07.2025 | புதன்கிழமை |

| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 08 14 37 52 | 4585 |

**KAPRUKA**

| திகதி | தினம் |
|---|---|
| 23.07.2025 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| C | 32 | 11 31 56 68 | 2049 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் |
|---|---|
| 23.07.2025 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Y | 06 10 17 41 | 2699 |

**JAYODA**

| திகதி | தினம் |
|---|---|
| 23.07.2025 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Y | 10 31 44 48 | 2146 |

# தோட்டத் தொழிலாளரை கைவிட்டது அரசாங்கம்

## மனோ எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 24

வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குறுதியளித்த 1700 ரூபா சம்பள அதிகரிப்பு இதுவரை வழங்கப்படவில்லை. அதனால் தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் கைவிட்டுள்ளது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், நாட்டின் பிரதான தொழிலாளர்களான தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் கைவிட்டுள்ளது. அவர்களுக்காக கவலைப்படுக் கதைக்கின்றார்களேதவிர அவர்களின் தேவைகள் எதனையும் நிறைவேற்றுவதில்லை. வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து ஜனாதிபதி உரையாற்றுகையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

ஆனால் அவ்வாறு எதுவும் அதிகரிக்கப்படவில்லை. திட்டமிட்டு அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அதனால் இது தொடர்பில் அரசாங்கம் கவனஞ்செலுத்தவேண்டும்- என்றார். (ச-இ)

# கழிவுகள் வீசின் கடும் தண்டனை!

## நல்லூர்ப் பிரதேசசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் பொதுஇடங்களில் கழிவுகள் வீசுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை பிரயோகிக்கப்படும் என நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் பொது இடங்களில் கழிவுகள் வீசும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சுகாதார விதிமுறைகளை மீறிச்செயற்படுவோருக்கு எதிராக 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்கப் பிரதேசசபைச் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-66)

# வரி நிவாரணங்கள் மக்களுக்குக் கிட்டாதா?

## தயாசிறி எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜூலை 24

எரிபொருள் வரிகள் குறைக்கப்படும் என்று ஆட்சிக்கு வர முன்னர் கூறியிருந்த அரசாங்கம் தொடர்ந்தும் பெருமளவு வரியை அறவிடுகின்றது. கூறப்பட்ட வரி நிவாரணம் எப்போது மக்களுக்கு வழங்கப்படும்? என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாய்மூல விடைக்கான கேள்விநேரத்திலேயே அவர் இவ்வாறு கேள்வியை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜூன் மாதத்தில் எரிபொருள் இறக்கப்பட்டமை தொடர்பான தகவல்கள் உள்ளன. அதாவது ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றரொன்று 161.18 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 120.42 ரூபா மக்களிடம் வரியாக அறவிடப்படுகிறது. உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ளது. டொலர் பெறுமதியும் குறைந்திருந்தது. உலக சந்தையில் எரிபொருள் விலை உயராமல் இருக்கும் நிலையில், 3 மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் இருக்குமாக இருந்தால் ஏன் ஜூலை மாதத்தில் எரிபொருள் விலையை அதிகரித்தீர்கள் - என்றார். (எ-இ)

# இலங்கை - இந்திய கப்பல் சேவை இந்த ஆண்டில் 17,000 பேர் பயணம்

கொழும்பு, ஜூலை 24

இலங்கை - இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஊடாக இந்த ஆண்டில் இதுவரை சுமார் 17 ஆயிரம் பேர் பயணித்துள்ளனர் என்று போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பயணிகள் கப்பல் சேவை 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இரண்டு படகுகள் சேவையில் ஈடுபடுகின்றன. எனினும் இறங்குதுறை தொடர்பான பிரச்சினை உள்ளது. இந்தியா அதற்காக உதவத் தயாராக இருக்கின்றது. கப்பல் சேவை ஊடாக இந்த ஆண்டில் இதுவரை சுமார் 17 ஆயிரம் பேர் பயணித்துள்ளனர். 153 சேவைகள் நடைபெற்றுள்ளன. கடல் சீற்றக் காலத்தில் இந்தச் சேவை நிறுத்தப்படுகின்றது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் உயரும்

## தொழில் அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 24**

**தனியார் துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 27 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க கடந்த ஏப்ரல் மாதம் முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்தத் தொகை 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வேலையாட்களின் வரவு- செலவுத் திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்ட வரைவு மற்றும் வேலையாட்களின் குறைந்த பட்ச வேதனம் தொடர்பான (திருத்தச்) சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் அரச துறையினருக்கான சம்பள அதிகரிப்பு செய்யப்பட்டது. தனியார் துறையினரின் அடிப்படைச் சம்பளத்தை 30 ஆயிரம் ரூபா வரையில் அதிகரிக்க கலந்துரையாடினோம். 27 ஆயிரம் ரூபாவைக் குறைந்த பட்ச சம்பளமாக ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்குவரும் வகையிலும், 2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அதை 30 ஆயிரம் ரூபா வரையில் அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

30 ஆயிரம் ரூபா என்பது தற்போதைய பணவீக்க நிலைமையில் போதுமானது அல்ல. சாதாரண வாழ்வுக்கு ஒரு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை அவசியமாகும். எவ்வாறாயினும் பொருளாதாரத்தை நிலையாக்கி, உற்பத்திகளைப் பெருக்கியே அதைச் செய்யமுடியும்-என்றார்.(எ-இ)



# யாழ்.தேவியில் வந்த சகோதரத்துவம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் முகமாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சகோதரத்துவ ரயில் பயணம் நேற்று இடம்பெற்றது.

சகோதரத்துவத்தை நினைவுகூரும் விதமாக சோஷலிச இளைஞர் சங்கத்தால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

'கறுப்பு ஜூலை' யை, இனவாத நினைவாக அல்லாது சகோதரத்துவத்தினை நினைவுகூரும் நாளாக மாற்றும் முயற்சியில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பயணத்தில் கிளிநொச்சிப் புகையிரத நிலையத்திலிருந்து இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் எரங்க குணசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். (ச-113)

# காத்தோட்டிக்காய் கிலோ ரூ.8,000

சாவகச்சேரி, ஜூலை 24

ஆடி அமாவாசை நாளில் அத்தியாவசிய உணவுப் பண்டமாகப் பயன்படுத்தும் காத்தோட்டிக் காய் சந்தைகளில் கிலோ 8 ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. இவ்வருடம் மிகக் குறைந்தளவில் சந்தைகளுக்குக் கொண்டுவரப்பட்டதால் பெரும் கிராக்கி ஏற்பட்டு அதிக விலையில் விற்கப்பட்டதைக் காணமுடிந்தது. (ச-25,9,17)



# ஜூலை மாத அஸ்வெசும இன்றுமுதல்

கொழும்பு, ஜூலை 24

அஸ்வெசும முதற்கட்ட கொடுப்பனவுக்குத் தகுதி பெற்ற பயனாளர்களின் ஜூலை மாதத்துக்கான உதவித்தொகை இன்று பயநர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, அஸ்வெசும முதற்கட்டப் பயனாளர்களில் 14 இலட்சத்து 24 ஆயிரத்து 548 குடும்பங்களுக்கு உதவித்தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# அடிப்படை உரிமைகளை மீறினார் ரணில்

## உயர்நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் விதிக்கப்பட்ட அவசரகாலத் தடைச் சட்டங்கள், அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி அன்று போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நாடு தழுவிய அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் குறித்த சம்பவத்தினால் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. (ச)




# எல்லாமே ரெடிமேட்தான்!

அண்டைக்கொருக்கா பிள்ளையளுக்காக பெற்றார்தான் இப்ப ஆக்கவேலையள், வீட்டுப்பாட வேலையள் எல்லாம் செய்யினம் எண்டு பட்சி சொன்னதெல்லோ. அந்தவிசயம் இப்ப எல்லைதாண்டிப் போய்க்கொண்டிருக்குது., சிறுவர் சந்தையில தன்ர பிள்ளைக்காக ஒரிஜினல் புடைவைக்கடை ஒண்டையே பெற்றார் போட்டுக்குடுத்ததுமாதிரி கனக்க இடங்களில நடந்திருக்காம்.

கிட்டடியில வவுனியாவில பள்ளிக்கூடமொண்டில பள்ளிக்கூடப் பிள்ளையளின்ர கண்காட்சி நடந்தது. அந்தப் பள்ளிக்கூடப் பிள்ளையளும், அவையின்ர பெற்றாரும்தான் கண்காட்சியைப் பாக்கலாமெண்டும், வேற ஆக்களுக்கு அனுமதி இல்லை எண்டும் பள்ளிக்கூட நிர்வாகம் சொல்லிப்போட்டுது. அதால கனபேருக்கு ஆதங்கம். அதைப் பெற்றார் சிலர் பள்ளிக்கூட வட்ஸப் குரூப்பில கொட்டித்தீர்த்திருக்கினம். "முந்தி நாங்கள் படிக்கேக்க தூரத்துப் பள்ளிக்கூடங்களில நடக்கிற கண்காட்சியளைக்கூட எங்களை சைக்கிளிலையோ, நடத்தியோ கூட்டிக்கொண்டு போய்க் காட்டுறவை. அதுகளைப் பார்த்திட்டு அதைவிட நாங்கள் நல்லாச் செய்யோணும் எண்ட மனநிலை எங்களுக்கு வாறது. வெளியாக்கள் வந்து பாப்பினம் எண்டு அந்தந்தப் பள்ளிக்கூடங்களும் தங்கட ஆக்கவேலையளை வடிவாச் செய்யிறவை. இப்ப என்னெண்டால் நாங்களே செய்து அதை நாங்களே போய்ப் பார்த்திட்டு வாறதில என்ன இருக்கு? உதுக்கேன் எக்ஸிபிஷன்? பேசாமல் வீட்டிலயே உந்தப் பொருள்களை வைச்சு நாங்கள் வடிவு பாக்கலாமே?" எண்டு அவை சொன்னதிலையும் நியாயம் இருக்கத்தான் செய்யுது.

எண்டாலும் "நாங்களே செய்து அதை நாங்களே போய்ப் பார்த்திட்டு வாறது" எண்டு அவை சொன்ன விசயம் தான் கொஞ்சம் உறுத்தலா இருக்குது. அதில இருந்தே அந்தக் கண்காட்சிக்கு வைக்கிற பொருள்களைப் பிள்ளையள் செய்யேலை எண்டதும், பெற்றார் தான் செய்தவை எண்டும் வடிவா விளங்குது. பெற்றாரே செய்துபோட்டு அவையே போய்ப்பாத்திட்டு வந்திருக்கினம். சரி, பிள்ளையளுக்கு அந்தப் பொருள்களைச் செய்யத்தெரியாட்டி, பெற்றார் செய்யேக்க அதைப் பார்த்தாலாவது அவைக்குக் கொஞ்சம் கற்பனா சக்தியும், உப்பிடியான ஆக்கப்பொருள்களைச் செய்ய வேணும் எண்ட ஆர்வமும் வரும். ஆனால் பகிடி என்னெண்டால், உந்தப் பொருள்கள் எல்லாத்தையும் பெற்றாரும் செய்யிறேலையாம். இப்ப எல்லாப்பொருள்களும் ஓர்டர் தானாம். மரங்களில செய்யிற உருவங்கள், பொருள்கள் எண்டால் பக்கத்தில இருக்கிற ஆசாரிமாரிட்ட போய்க் காசைக் குடுத்து செய்விக்கினமாம். அதைமாதிரி வெல்டிங் செய்யிறவை, டெக்கிரேசன் செய்யிறவை எண்டு இப்பிடியான ஆக்கப்பொருள்களைச் செய்யிறதுக்கெண்டே ஆக்கள் இருக்கினமாம். அதால இப்ப கண்காட்சி எண்டாலோ, ஆக்கப்பொருள் செய்யிறதெண்டாலோ பெற்றாரும் பெரிசா மினக்கெடுறேலை. பிள்ளையளை ரியூசனுக்கும், பள்ளிக்கூடத்துக்கும் ஏத்திப்பறிக்கவே அவைக்கு நேரம் காணாது. அதுக்குள்ள இதுகளையும் செய்யேலுமோ? அதால இப்ப எல்லாம் ரெடிமெட் தானாம். இப்பிடியெல்லாம் ரெடிமேட் பொருள்களை வாங்கிக் கண்காட்சியளை வைச்சு, காசைக் கரியாக்கிறதைவிட, ஒண்டுமே செய்யாமல் இருக்கிறதே உத்தமம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும்.தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்து விடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்களில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**இடபம்:** உற்சாகமான நாள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர்ப்பொருள் வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடியாக முடியும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளையசகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும்வாய்ப்பு உண்டாகும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**கன்னி:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டுக்குச் சென்றுவருவீர்கள். சிலருக்குக் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள்.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத செலவுகளால் மன உளைச்சல் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சிஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டிவரும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவுசெய்ய வேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டிவரும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.





# பிதிர் வழிபாட்டுக்குரிய புண்ணியமான தினம் ஆடி அமாவாசை

மதுரகவி.
காரை. எம். பி. அருளாந்தன்.

இந்துக்களால், நிறைவேற்றப்பட்டுவருகின்ற வழிபாடுகளில் ஆடி அமாவாசை முக்கியமானதோர் இடத்தை வகிக்கின்றது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதிர் வழிபாட்டுக்குப் புண்ணியமான தினம் எனச் சாஸ்திரம் கூறுகின்றது. ஆடி அமாவாசை தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பலவினைகள் அறும் என்றும், பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைத்து முன்னோர்களின் பிதிர்களை எண்ணி, அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும்படி இறைவனை வேண்டித் தீர்த்தமாடுதல் வேண்டும்.

ஆடி அமாவாசையில் சிவபதமடைந்த பெற்றோருக்கும் செய்யும் தர்ப்பணம், சிரார்த்தம்மூலம் காணிக்கையை, அன்பை அவர்களுக்குச் செலுத்துகின்றோம். அவர்களின் ஆசிர்வாதங்களும் பாதுகாப்பும் நமது நல்வாழ்வுக்குத் தேவை. எமது சமயத்தின் விதிமுறைப்படி தெய்வத்தை நேராக வழிபட்டு அனுக்கிரகம் பெறும் நிலை மிக உயர்ந்தநிலையில் பக்குவமடைந்த சந்நியாசிகள் போன்றோருக்கே உரித்தானது. ஏனையோர் தேவதைகளைப் பிரிதி செய்து தெய்வங்களின் அனுக்கிரகம் பெற்று நன்மையடைய வேண்டும். தேவதைகளைப் பிரிதி செய்வது யாகங்கள், வேள்விகள், ஹோமங்கள்மூலம் ஆகும். இவ்வாறே பிதிர்களைப் பிரிதி செய்ய சிரார்த்தம், தர்ப்பணம், பிண்டதானம் என்பவை செய்யப்படுகின்றன. இவற்றின் மூலமே நாம் நன்மையடையவேண்டும். எனவே அமாவாசை, பௌர்ணமி விரதங்கள் மற்றும் சிரார்த்தம் முதலியவற்றைத் தவறாது அனுஷ்டித்து வரவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன.

இவ்வாறு இவற்றை அனுஷ்டிக்காதவர்களுக்கு பிதிர் சாபம் ஏற்படுகின்றது. என்றும், பிதிர் சாபம் வாழ்வில் இன்னல்களையும் தொல்லைகளையும் தருகின்றது என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளனர். சித்திரை மாதத்தில்வரும் சித்திராப் பௌர்ணமியும், ஆடி மாத்தில் வரும் ஆடி அமாவாசையும் இறப்புப் பொருந்தியன என்றும் சைவ நூல்கள் கூறுகின்றன. அவரவர் தந்தை இறந்த திதிகளைத் தவறவிட்டவர்கள் ஆடி அமாவாசை தினத்தில் தந்தையை நோக்கியும் சித்திரைப் பௌர்ணமி தினத்தில் தாயின் பொருட்டும் சிரார்த்தம், தர்ப்பணம், பிண்டதானம் என்பனவற்றைச் செய்தல் சிறந்ததாகும்.

ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல் பிதிர் வழிபாடு செய்தல், தர்ப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டுதோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. அது மட்டுமல்ல இதுபோல பல்வேறு திருத்தலங்களிலும் இந்துப்பெருமக்கள் இவ் வைபவங்களை நிறைவேற்றிவருகின்றனர். இன்று 24.07.2025 வியாழக்கிழமை ஆடி அமாவாசையாகும்.

# மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற உள்ளது. காலை 9 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று மதியம்12 மணிக்கு அடியார்களுக்கு உபயகாரர்களால் அன்னதானம் வழங்கப்படும். மாலை 7 மணிக்கு வசந்தமண்டப தீப ஆராதனைகள் நடைபெற்று வள்ளி தெய்வானை சமேதராக முருகப்பெருமான் விநாயகர் சகிதமாக உள்வீதி வெளிவீதி வலம்வரும் திருக்காட்சியும் இடம்பெறும். (ச-25)

மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப்பெருவிழாவின் 9ஆம் நாள் உற்சவமான வேட்டைத்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்புற இடம்பெற்றது. (ச-41-100)



# இலவச உரவகைக்கான பதிவுகளை மேற்கொள்க

சாவகச்சேரி, ஜூலை 24

மறவன்புலவு கமக்கார அமைப்புக் குட்பட்ட விவசாயிகளுக்கு இலவச உரவகைகளுக்கான பதிவுகள் நாளையும் எதிர்வரும் 29 ஆம் திகதியும் சாவகச்சேரி நகர் செருக்கல் பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள பொதுநோக்கு மண்டபத்திலும், ஜூலை 30,31 மற்றும் ஓகஸ்ட் முதலாம் திகதிகளில் மறவன்புலவு பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறும்.

அங்கத்தவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மற்றும் சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகைதருமாறு அமைப்பின் தலைவர் சி. திருஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## அரக்கர்களும் நோபலும்!

'ஈழத்தமிழர்களின் இறையாண்மையை மீட்பதற்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் துணைநின்றால், அவரை அமைதிக்கான நோபல் பரிசிலுக்குப் பரிந்துரைப் போம்' என்று அறிவித்திருக்கின்றனர் வவுனியா மாவட்டத்தில் அண்மையில் போராட்டம் நடத்திய காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள். அதிபர் ட்ரம்ப் 'அமைதிக்கான நோபல்' பரிசிலில் அலாதிப் பிரியம் கொண்டவர். தனது கடந்த ஆட்சிக்காலத்தில் அந்தப் பரிசில் கிடைத்திருக்கவேண்டும். தற்போதும்கூட அதற்குத் தான் தகுதியான நபர் என்பதை அவர் பொதுமேடைகளில் பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறான பின்னணியிலேயே, காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுடைய கருத்து வந்தமைந்திருக்கின்றது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஒன்றும் தலாய்லாமாவோ அல்லது 'நிஹொான் ஹிடங்யோ'வின் பிரதிநிதியோ அல்லர். அவரின் நம்பிக்கைகளும், கொள்கைகளும் அடக்குமுறைகளையும் ஆயுதங்களையும் மையப்படுத்தியவை. இன்று காஸாவில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றால், அதில் 80 வீதத்துக்கும் மேற்பட்ட பங்கு அமெரிக்க ஆயுதங்களுடையதே. அதிலும் குறிப்பாக அதிபர் ட்ரம்ப், காஸாவில் இருந்து அப்பாவிப் பலஸ்தீனர்களை முற்றாக விரட்டிவிட்டு, அந்த மக்களின் நிலத்தை சர்வதேச சுற்றுலாத் தலமாகவும் வர்த்தக வலயமாகவும் மாற்றும் வகையில் செயற்பட்டுவருகின்றார். ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச போர்க் கண்காணிப்பகங்கள் ஆகியவற்றின் எதிர்ப்பையும் மீறி, காஸாவில் உணவுக்காகக் காத்திருக்கும் பாலகர்களை இஸ்ரேலால் படுகொலை செய்யமுடிகின்றதென்றால், அதற்குப் 'பின்னணியில் ட்ரம்ப் இருக்கின்றார்' என்ற துணிச்சலே காரணம். இதைப் புரியாதவர்களும் இல்லை: தெரியாதவர்களும் இல்லை. தவிர, உலமெங்கும் போர்களை ஊக்குவித்தல், அகதிகளை அருவருத்தல், உலக நாடுகளிடையே மோதல்களை ஏற்படுத்துதல் என்று ட்ரம்ப் மீதான குற்றச்சாட்டுகள் மிக நீட்சியானவை. இவ்வாறான ஒரு நபர், தமிழர்களின் இறையாண்மைக்காகக் குரல்கொடுத்தால் (வாய்ப்பில்லை), அவரின் பெயரை அமைதிக்கான நோபலுக்குப் பரிந்துரைப்போம் என்பது அர்த்தமற்ற கூற்றுமட்டுமல்ல, காணாமலாக்கப்பட்டோருக்காக மேற்கொள்ளப்படும் அத்தனை போராட்டங்களையும் மலினப்படுத்தும் செயலுமாகும்.

ஸ்ரீலங்காவின் முன்னாள் அதிபர் மஹிந்தவுக்கு, சில வருடங்களுக்கு முன்னர் பலஸ்தீன அரசாங்கம் 'பலஸ்தீன நட்சத்திரம்' என்ற தனது உயரிய விருதை வழங்கிக் கௌரவித்தது. கௌரவித்தது என்பதை விடவும், மாறாத கறையைத் தேடிக்கொண்டது என்பதே பொருத்தமாக இருக்கும். தமிழர்கள் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கும் ஒரு நபருக்கு பலஸ்தீனம் கௌரவமளித்து தன்னை கேவலப்படுத்தியதாகவே சர்வதேசம் அந்தச் செயலைக் கருதியது. பலஸ்தீனம் தனது 'சொந்த விருதை' மஹிந்தவுக்கு வழங்கியமைக்காகவே அத்தனை எதிர்ப்பென்றால், மஹிந்தவை விடவும் பல மடங்கு குருதிக்கறை படிந்த போர்க்குற்றவாளியான ட்ரம்பை, 'உலக விருதான' அமைதிக்கான நோபலுக்கு பரிந்துரைப்பதென்பது எவ்வளவு பெரிய அபத்தம். போராட்டங்கள் கத்திமுனையில் நடப்பதைப் போன்றவை. மிகவும் நல்ல போராட்டங்களை சில சிறிய செயல்களும், அர்த்தமற்ற வார்த்தைகளும் ஒன்றுமில்லாமல் செய்துவிடும். அதன் தாற்பரியத்தை சார்ந்தோர் உணர்ந்து கொள்வது அவசியம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

முயற்சிக்கும்வரை உங்களால் என்ன சாதிக்கமுடியும் என்பது உங்களுக்கு ஒருபோதும் தெரியாது.

– மைக்கேல் ஜோர்டன் –




# அநீதியை மறைக்க அரசாங்கம் முயற்சி!

### வலி.கிழக்குத் தவிசாளர் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட படுகொலைகள் நடந்தன என்ற உண்மையையும், அநீதிகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்ற கடப்பாட்டையும் மூடி மறைக்கும் வகையில் அரசாங்கம் கறுப்பு ஜூலை நிகழ்வுகளை மடைமாற்றம் செய்ய எத்தனிக்கின்றது என்று வலி. கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடிப்படையான ஜே.வி.பி.யின் உத்தியோகபூர்வ இளைஞர் அமைப்பான சோஷலிச இளைஞர் சங்கம் சகோதரத்துவ நாள் என்று கறுப்பு ஜூலை நிகழ்வுகளை மடைமாற்றம் செய்ய எத்தனிக்கின்றது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
42 ஆண்டுகளுக்கு முன்னர் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உள்ளிட்ட 54 அரசியற் கைதிகள் வெலிக்கடைச் சிறையில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். வாக்காளர் பட்டியலுடன் தேடிச்சென்று 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களை உயிருடன் தீயில் இட்டும் இதர கொடூரங்களூடாகவும் கொன்றழித்தனர். இந்தச் சம்பவத்தை பன்னாட்டு மனித உரிமைகள் ஆணையம் தமிழருக்கு எதிரான திட்டமிட்ட இனப்படுகொலை என விபரித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.
இந்தப் படுகொலைகளுக்கு ஜே.வி.பியும் பொறுப்புடையது. நாட்டில் இனப்படுகொலை நடைபெற்றமைக்கு பொறுப்புக்கூறல் எதையும் முன்வைக்காமல் அந்தத் தேவையைப் போர்த்தி மூடிவிடும் உத்தியுடன் தற்போதைய அரசாங்கம் நிதானமாகச் செயற்படுகின்றது- என்றார். (எ-20)

## இவ்வாண்டில் இதுவரை 73 துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜூலை 24
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 73 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களின்போது 38 பேர் உயிரிழந்துள்ளனர். 43 பேர் காயமடைந்துள்ளனர்.
அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## எயார்லைன்ஸ் ஊழல் விசாரிப்பதற்குக் குழு

கொழும்பு, ஜூலை 24
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் மற்றும் வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள், விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனங்களில் நடந்த மோசடி, ஊழல் மற்றும் முறைகேடுகளை விசாரிக்க விசேட விசாரணைக்குழுவை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.
இந்தச் சம்பவங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து துரிதமாக விசாரணையை நடத்தவும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கத் தேவையான வழிகாட்டுதல்கள் அடங்கிய அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கவும் அந்தக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## பலத்த காற்று

கொழும்பு, ஜூலை 24
பலத்த காற்று தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை அறிவிப்பை விடுத்துள்ளது.
வடக்கு, வடமத்திய, வடமேல், மத்திய மாகாணங்கள் மற்றும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் நிலவும் தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி காரணமாக, இந்த மாவட்டங்களில் சில நேரங்களில் மணிக்கு 55-60 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - ஆடி 09
25.07.2025
சுபநேரம் : 06.02 - 07.32
ராகுகாலம் : 10.32 - 12.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கிலியன் பூங்காவில் பனைவாரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் வடக்கு மாகாண பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்தும் நடத்தும் பனை எழுச்சிவாரம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

'எங்கள் வாழ்வியலில் பனை' என்ற தொனிப் பொருளில் நடத்தும் பனைசார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி, விற்பனை இந்த எழுச்சிவாரத்தின்போது இடம்பெறும். இந்த எழுச்சி வாரத்தின் தொடக்க நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் வடமாகாண ஆளுநர் என்.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-17)

# வாய்க்கால் பிரச்சினைகள் யாழ். முதல்வர் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மகாத்மா காந்தி வீதி நகர்ப்புற பிரதான வாய்க்காலில் உள்ள பிரச்சினைகள், தடைகள் மற்றும் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் யாழ். மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா நேரில் ஆராய்ந்தார். மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்து நகர்ப்புற வாய்க்கால்களிலும் உள்ள தடைகளை அடையாளம் கண்டு சீரமைக்கும் முகமாக இந்தக் களப்பயணம் அமைந்துள்ளது. (ச-20)

# மாவைக்கந்தனுக்கு இன்று தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தத்திருவிழா இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

மாவிட்டபுரக் கந்தன் இன்று காலை கண்டகி புனித தீர்த்தத்திற்கு எழுந்தருளி அங்கு தீர்த்தமாடி அபிஷேகம் இடம்பெறும். ஆடி அமாவாசை தினமான இன்று கீரிமலை புனித தீர்த்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் தீர்த்தமாடி தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவார்கள். (ச-41-17)

# சுப்பர்மடம் முனீஸ்வரர் தீர்த்த உற்சவம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 24

பருத்தித்துறை சுப்பர்மடம் அருள்மிகு முனீஸ்வரர் ஆலய தீர்த்த உற்சவம் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இவ்வாண்டுக்கான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வரும் நிலையில் 10 ஆம் நாளான இன்று ஆடி அமாவாசை தினத்தன்று அதிகாலை 5.30 மணியளவில் அபிசேகமும் அதனைத் தொடர்ந்து 6.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும் இடம்பெற்று முனீஸ்வரப் பெருமானின் சமுத்திரத் தீர்த்தம் 7.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர்மடை இடம் பெற்று, வரும் ஞாயிற்றுக்கிழமை தெற்பத்திருவிழா இடம்பெறவுள்ளது. (ச-100)


## விலைக்கேள்விக்கான கோரல் - (2025/04)
## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்

1. நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம் சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்

   **மதிப்பீட்டுத் தொகை 5 மில்லியனிற்கு மேற்படின் விலைக்கேள்வியாளர்கள் பொது கென்றாக்ற் சட்டம் 1987 இல் 03 ன் பிரகாரம் பதிவினை மேற் கொண்டிருக்க வேண்டும்.**
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின் வகுதி 04 ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மேலதிக தகைமைத் தேவைகள் தொகுதி A ற்கான வேலைக்கு SBD 1 இற்கமைவாக பெறுகை ஆவணத்தின் வகுதி 05 இலும் (Bidding Data & Contract Data) தொகுதி B ற்கான வேலைகளுக்கு SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் வகுதி 05 இலும் (Schedule) குறிப்பிடப்பட்டுள்ளன.
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அவ் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் **2025.07.24 இல் இருந்து 2025.08.07 ஆம் திகதி வரையும்** விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம், மீனாட்சி அம்மன்வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-205 7102/021-222 4782, தொலைநகல் 021-205 7103) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி வரை சமர்ப்பித்து** கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியில் மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், திணைக்களப்பெறுகைக்குழு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு 2025.07.31 ஆந் திகதியில் நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணைப்பொறுப்பானது வங்கிப்பிணைப்பத்திரம் / மீளளிக்கப்படக்கூடிய கட்டுப்பண வைப்பு மூலம் மேற்கொள்ளப்படலாம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | **From 2025-07-24 To 2025-08-07** | | | | |
| | **Pre-Bid Conference** | | | **At 2.30 P.M on 2025-07-31** | | | | |
| | **Closing and Opening of Bids** | | | **At 10.30 A.M on 2025-08-11** | | | | |
| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fee (Rs.)** | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | | **Bid Validity Period** |
| | | | | | | **Security Amount (Rs.)** | **Validity Period** | |
| **GROUP A** | | | | | | | | |
| PSDG/NP/B/DOP/KN/2025/01 | Construction of Kitchen Building at Nanthavanam Safe House, at Kilinochchi | 16.10 | 120 | C7 or above (Buildings) | 6,000.00 | 161,000.00 | 25/11/2025 | 27/10/2025 |
| L.M/NP/B/DOP/JA/2025/01 | Renovation works of Old Building Children area at certified school, Atchchuvely | 11.00 | 90 | C7 or above (Buildings) | 5,000.00 | 110,000.00 | 25/11/2025 | 27/10/2025 |
| **GROUP B** | | | | | | | | |
| L.M/NP/B/DOP/JA/2025/02 | Renovation work of Kitchen at Certified School, Atchuvely | 4.24 | 90 | C8 or above (Buildings) | 3,000.00 | 43,000.00 | 27/10/2025 | 29/09/2025 |

**தவிசாளர்,**
**திணைக்களப்பெறுகைக்குழு,**
**நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்,**
**வடமாகாணம்,**
**மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.**
24.07.2025



## வீடு வாடகைக்கு

கொக்குவில், குளப்பிட்டி சந்தியில்
வாகன தரிப்பிடத்துடன்
மாடி வீடு வாடகைக்கு உண்டு.
தனியார் நிறுவனங்கள்
அரச உத்தியோகத்தர்களின் குடும்பங்கள்
விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :- 077 652 0452



## வகுப்புக்கள் ஆரம்பம்

**கல்விப் பொதுத்தராதர உயர்தர** (A/L)

- **மாணவர்களுக்கான புவியியல்** (Geography) **மற்றும்**
- **ஊடகக்கற்கைகள்** (Media studies)

**வகுப்புகள் கற்பிக்கப்படும்.**

**ஆசிரியர் :**

**சி.சரந்குமார் B.A (யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)**

0781875249, 0788647022



## சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம்.
## கேள்வி பத்திர மனு கோரல்


ஆலயத்தில் பயன்பாட்டில் நல்ல நிலையில் உள்ள கூரை வளைகள், பனை மரங்கள், ஓடுகள் என்பன மூடிய கேள்விபத்திர கோரல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. குறித்த பொருட்களை 22-07-2025 செவ்வாய்க்கிழமை 26-07-2025 சனிக்கிழமை வரை தினமும் காலை 7.00 மணி முதல் - மாலை 5.00 மணி வரை பார்வையிட்டு மூடிய கேள்விப்பத்திர மனுவினை 27.07.2025 ஞாயிற்றுக் கிழமை மு.ப 8.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். விலைமனுவிற்கான மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரொக்கம் ரூபா 5,000.00. கேள்விப்பத்திரங்கள் 27-07-2025 மு.ப 8.30 மணிக்கு ஆலயத்தின் திருமண மண்டபத்தில் திறக்கப்படும்.

மேலதிக விபரங்கள் மற்றும் மாதிரி கேள்விப் பத்திரம் ஆகியவற்றினை - தர்மகர்த்தா சபைக் காரியாலயம், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தொடர்பு - (021 225 5222)** (CR/45607) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாககிரஹ யக்ஞ அழைப்பிதழ்



### அமரர் சிவஸ்ரீ சுந்தரக்குருக்கள் ஞானசர்மா

நிகழும் விசுவாவசு வருஷம் ஆனி மாதம் 31ம் நாள் (15.07.2025) செவ்வாய்க்கிழமை அபரபக்க பஞ்சமி திதியில் **சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சிவஸ்ரீ சுந்தரக்குருக்கள் ஞானசர்மா** அவர்களின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனைகள் பின்வரும் தினங்களில் அனாரின் இல்லத்தில் நடைபெறும்.

**24.07.2025 வியாழக்கிழமை காலை 10 மணி தசாகம்**
**25.07.2025 வெள்ளிக்கிழமை காலை ஏகோதிஷ்டம். மாசியம்**
**26.07.2025 சனிக்கிழமை காலை சபீண்டீகரணம்**
**27.07.2025 ஞாயிற்றுக்கிழமை கிரஹயக்ஞம் (மதியபோசனம் 12 மணி)**


மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் சமாதாரனையிலும் (மதியபோசனம்) கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

7/3 பூதவராயர் சிவன் கோவிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 041 7905, 077 978 7229,
076 257 3501

## ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10 . 04 . 1968

மறைவு
17 . 07 . 2023

### அமரர் வேலாயுதம் சிவசக்திவேல்

திதி : ஆடி அமாவாசை
(பிரதி அதிபர்: யா/ இணுவில் இந்து கல்லூரி,
முன்னாள் அதிபர்: யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்)

ஆருயிர் அப்பாவே!
அப்பா என்று ஆசையோடு அழைத்து
ஈராண்டு ஓடிவிட்டது.
உங்களின் அமைதியான முகம்,
அழகான சிரிப்பு, இளகிய மனம்
இனிமையான பேச்சு, அதீத மனவலிமை
அத்தனையும் இப்போது நினைவுகளாய் மட்டும்...
என்றென்றும் எம் மனதில் வாழ்ந்து கொண்டுதான்
இருப்பீர்கள் அப்பா!

M.S வீதி,
கோண்டாவில்.

(CR/58926) J-1

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11 . 05 . 1957

விண்ணில்
24 . 07 . 2024



### அமரர் செபமாலை மரியதாஸ்
### (அருள்நேசன்)

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி சிரேஷ்ட
நிறைவேற்று உத்தியோகத்தர்)

நித்தமும் எம் நினைவுகளில்
நீக்கமற நிறைந்த நிகரற்ற சிகரமே
இணைபிரிந்த மானமகாக் கதறுகிறோம்
இப்புவியில் இனி எங்கு காண்போம் உமை


அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக 24.07.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்குபற்றி செபிக்குமாறும் தொடர்ந்து எமது இல்ல வழிபாட்டிலும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CR/58925) E

இல 22, கூழாவடி கிழக்கு,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்
077 620 4578 / 077 9590 375

இவரது பிரிவால்துயருறும்
மனைவி, மகள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 . 03 . 1937

மறைவு
04 . 08 . 2024

### அமரர் தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி

(ஓய்வு பெற்ற பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம் கிளை
முகாமையாளர் - பரந்தன்)

ஆண்டு ஒன்று கடந்தது உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை
நேற்றுப்போல் உள்ளதப்பா...

காலங்கள் பல கடந்தாலும் எம் மனதில் நீங்கள்
என்றும் காவியமாய் இருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.


சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு
மீசாலை.

என்றும் நீங்காத
நினைவுகளுடன்
சின்னத்தம்பி குடும்பத்தினர்.
077 776 7917

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம்
02 . 09 . 1937

மறைவு
22 . 07 . 2025

## செல்லத்துரை இராசேந்திரம் (பத்தர்)

சங்கானையை பிறப்பிடமாகவும் அல்வாய், அல்வாய் தெற்கு மாலு சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசேந்திரம் (பத்தர்) அவர்கள் 22.07.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.07.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மகன், மகள்,மருமகன், மருமகள்,பேரப்பிள்ளைகள்

077 322 3060

(CS 30454) E

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## இராமசாமி சண்முகசுந்தரம்
(Shan)



தோற்றம் 26.11.1955
மறைவு 16.08.2023

(Senior Teacher English
Dip in English ment pass
University of Jaffna
B.A in Social Science
Sp Ted in English Delie Trd)
(Vavuniya)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வத்தில்
ஒன்றாகக் கலந்திருக்கும் எங்கள்
அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டுகிறோம்.

சண்முகசுந்தரம் குடும்பம்
077 755 5542
புலோலி வடமேற்கு, புலோலி.

(CR/58929) J-1

# INVITATION FOR BIDS
## THUNUKKAI PRADESHIYA SABHA

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Thunukkai Pradeshiya Sabha,Vellankulam Road, Thunukkai invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 24.07.2025 until 06.08.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 31.07.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 02.30 P.M on 07.08.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security | |
| | | | | | | | | | Amount (Rs.) | Validity Period |
| 1 | PSDG/NP/MU/TKPS/2025/WM/01 | Consturction of Waste Collecting Center at Thunukkai PS Head Office | PSDG Fund | 1.27 | 63 | C9 above (Building) | 1500.00 | 08-Oct-2025 | 20,000.00 | 05-Nov-2025 |

A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai (T.P: 021 228 4532, email: psthunukkai@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.

5. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thuukkai on or before 02.30 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai.
6. Pre-Bid Conference will be held at Conference Hall, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukai commencing at 10.30 AM as stated in table above.
7. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Thunukkai Pradeshiya Sabha,**
**Vellankulam Road, Thunukkai.**

# மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 04 . 1933

மறைவு
23 . 07 . 2025

## இராசதுரை பரமேஸ்வரி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை பரமேஸ்வரி அவர்கள் நேற்று (23.07.2025) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை அவர்களின் மனைவியும், சிவஞானேஸ்வரி, சிவஞானேஸ்வரன், லிங்கேஸ்வரி, ஜமுனா, உஷாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற புலேந்திரன், மாலினி, மகேந்திரன், யோகராசா, சந்திரபாலன் ஆகியோரின் மாமியாரும், பத்மேந்திரா, பாலேந்திரா, ஹரிகரேந்திரா, கிரிஷாந், கீர்த்தனா, பிரசாந், வினோதா, பபிதா, நர்மதா, அனுராஜ், வைஷ்ணவி, பகீர்த்தனா, ரஜீராம், பவராம், அஜந்தா, சிபானி, திருஷாந்தி, ஜெயரூபி, மதியழகன், தாட்சாயினி, பாபுராஜ், செந்தாளன், சத்தியராஜ், சுகன்யா, றொபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரனுஜன், அபூர்வஜா, சாயிஷா, கருண், ஆருதி, ஆஷ்வி, சானுகா, நிஷான், நிகேசன், லரன்ஜா, லிதுன்ஜா, ருத்ரஜா, லித்வின், தானியா, இயல், அகரன், வெண்ணிலா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2025) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்பு ஜூலை நினைவு

யாழ்ப்பாணம், ஜூலை 24

கறுப்பு ஜூலையின் 42 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள பொது நினைவுத் தூபியடியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்பட்டது. நினைவேந்தல் நிகழ்வில் 1983 கறுப்பு ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்ட அனைத்துத் தமிழ்மக்களுக்காகவும் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டு அதனைத் தொடர்ந்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ச-66)




# புலம்பெயர் தேசங்களிலும் கறுப்பு ஜூலை நிகழ்வுகள்




லண்டன், ஜூலை 24

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகக் கறுப்பு ஜூலைப் படுகொலைகள் இடம்பெற்று 42ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, புலம்பெயர் நாடுகளிலும் நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரிட்டன் கிளையின் ஏற்பாட்டில், பிரிட்டன் பாராளுமன்ற சதுக்கத்திலும் நூற்றுக் கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும், ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் வேண்டும் உள்ளிட்ட பல்வேறு வலியுறுத்தல்களை முன்வைத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-23)

# அஸ்வெசும மேன்முறையீட்டு காலம் நீடிப்பு

அஸ்வெசும நலத்திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடர்பான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்வதற்கான காலத்தை இந்த மாதம் 31 ஆம் திகதி வரைநீடிக்க நலன்புரி நன்மைகள் சபை தீர்மானித்துள்ளது.

அஸ்வெசும இரண்டாம் கட்டத்தில் இதுவரை 39,707 மேன்முறையீடுகளும் 3,183 ஆட்சேபனைகளும் பெறப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)





தமிழ்த்தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை கலவரங்களில் கொல்லப்பட்டோருக்கான 42ஆவது வருட நினைவேந்தல், நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு அருகில் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. (ம-66)

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 11 . 1970



மறைவு
21 . 07 . 2025

## நந்தினி சயந்தன்

யாழ் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கனடா Bownmanville ஐ வதிவிடமாகவும் கொண்ட நந்தினி சயந்தன் அவர்கள் கடந்த (21.07.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - தங்கம்மா அவர்களின் பேத்தியும், நடராஜா - பரமேஸ்வவரி தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற மகாதேவன் - பரமேஸ்வரி தம்பதியினரின் மருமகளும், சயந்தன் மகாதேவன் அவர்களின் மனைவியும், கிஷான், ஆகாஸ் ஆகியோரின் தாயாரும், கலைச்செல்வன் (சுரேஸ் - கனடா), ரமணன் (தினேஸ் - அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாரணி கலைச்செல்வன், கனிஷ்டப்பிரியா ரமணன், சசிகலா பாஷ்கரன், சாயினி கிரிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெசிக்கா, மொனிக்கா, ஒலிவியா, தீபிகா, கீர்த்திகா, ஆனந், அஷ்மிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.07.2025) திங்கட்கிழமை முற்பகல் 09:00 மணியளவில் Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax,ON L1S 2E3, Canada இல் நடைபெற்று தகனக்கிரியைகள் Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax,ON L1S 2E3, Canada நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியப்பா - 075 326 5540
மச்சான் - 077 390 1954
சகோதரன் - + 141 6953 0175

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## செல்வரத்தினம் சிவகாமசுந்தரி (வேவி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சிவகாமசுந்தரி அவர்கள் நேற்று (23.07.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை-இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமுப்பிள்ளை-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் சீதாலட்சுமி (கனடா), ஜெயலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடராசா, பாலசுந்தரம் மற்றும் சிவபாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2025) வியாழக்கிழமை பிற்பகல் 02.30 மணியளவில் குப்பிளானிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குப்பிளான் கடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 601 4885-பெறாமகள் (கலா)
0016 476 147706-சகோதரி (ஜெயம்)

தகவல்:
குடும்பத்தினர்

# கத்திவெட்டு

யாழ், ஜூலை 24

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டிப் பகுதியில், குடும்பத்தலைவர் ஒருவரை இலக்கு வைத்து நேற்று மாலை கத்தி வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத் தலைவர் ஒருவரே இடைமறிக்கப்பட்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. காயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணியில் சர்வதேச தலையீடு கரவெட்டி பிரதேசசபை தீர்மானம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

செம்மணி மனிதப் புதைகுழியில் இடம்பெறும் அகழ்வுப் பணிகளை சர்வதேசம் கண்காணிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கரவெட்டி பிரதேச சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கரவெட்டி பிரதேசசபையின் அமர்வு நேற்று புதன் கிழமை காலை தவிசாளர் கு.சுரேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது உபதவிசாளர் தி.தயாபரன் செம்மணியில் கொல்லப்பட்ட மக்களுக்காகவும், கறுப்பு ஜூலையில் கொல்லப்பட்ட மக்களுக்காகவும் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்துமாறு பிரேரணையைக் கொண்டுவந்தார். அந்தப் பிரேரணை ஏற்கப்பட்டு சபையில் சமூகமளித்திருந்த 30 உறுப்பினர்களும் எழுந்து நின்று மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர். இதைத் தொடர்ந்தே செம்மணி உள்ளிட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளும் சர்வதேசத்தின் கண்காணிப்பின் அகழவும் விசாரிக்கப்படவும் வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம-100-23-66-26)




## ST. JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancy:


➤ **Teacher - Chemistry (English/ Tamil Medium) A/L Classes**

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 04th august 2025 to the address below. Only shortlisted candidates will be called for an interview.

Kindly indicate the post you are applying for at the top left hand corner of the envelope.

**The Principal**
**St.John's College**
**Jaffna**

## மரண அறிவித்தல்



பிறப்பு:05.02.1971 இறப்பு:21.07.2025

**செல்லன் விஜயசிவம் (சோதி)**

கலைஞர், சமூக ஆர்வலர்
புத்தூர் கிழக்கு - கனடா

அமரர்களான செல்லன் சரஸ்வதி தம்பதியரின் மகனும், எனது மருமகனுமாகிய செல்லன் விஜயசிவம் (சோதி) அவர்கள் கடந்த 21.07.2025 அன்று காலமாகவிட்டார். அன்னாரின் திருவுடல் எனது இல்லத்தில் இருந்து நாளை (25.07.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு புத்தூர் தமிழாலய அரங்கில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் புத்தூர் அந்திரானை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
புதுவை அன்பன்
புத்தூர்.

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 13 . 09 . 1955



மறைவு 23 . 07 . 2025

**அப்பாத்துரை செல்வரத்தினம்**

மன்னார் அடம்பனைப் பிறப்பிடமாகவும் மன்னார் பெரியபண்டிவிரிச்சான் மற்றும் யாழ் கைதடி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திரு அப்பாத்துரை செல்வரத்தினம் அவர்கள் நேற்று (23.07.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை-வள்ளியம்மை தம்பதியின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அம்பலவாணர்-தங்கம்மா தம்பதியின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், தாரணி, யாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணபாலன், கோபிராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகமலர், காலஞ்சென்ற ராசம்மா மற்றும் கனகரத்தினம், அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும், அகர்ஷன், ஆருஷன், அகிஷன், ஆத்விக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
076 603 9948

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 03 . 1950



மறைவு 23 . 07 . 2025

**திரு. மார்க்கண்டு தவராசா**

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வர்ணன் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திரு. மார்க்கண்டு தவராசா அவர்கள் நேற்று (23.07.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - தங்கம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராசு - தங்கமலர் தம்பதியினரின் மருமகனும், நாகபூசனி அவர்களின் பாசமிகு கணவரும், தவக்குமார், தவமோகன், தவரூபி, தவரூபன், தவரூபிகா, தவரோகினி, தவதீபன், தவதீபிகா, தவராதிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேனகா, சுனிதா, விஜயரபணமூர்த்தி, நிக்சுயா, விஜயகுமார், சாந்தகுமார், வேணுகா, பகிதரன், விக்டர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.07.2025) வியாழக்கிழமை பிற்பகல் 12:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானச்சுடர்
### சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுலை 24
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் சஞ்சிகையின் 331ஆவது ஆடி மாத இதழ் வெளியீட்டு நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி மலரின் வெளியீட்டுரையையும், சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் மலரின் மதிப்பீட்டுரையையும் ஆற்றவுள்ளனர். (ம-25-66)

## கறுப்பு...

தாளர் மு.ஈழத்தமிழ்மணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் மூத்த போராளி சின்னையா தேவகுமார் பொதுச்சுடரேற்றி அஞ்சலித்தார். அதனைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட அனைத்துத் தமிழ்மக்களுக்காகவும் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தி.நிரோஷ் ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ந.ஸ்ரீகாந்தா, கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பம், தமிழ்த் தேசியப் பேரவையின் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

'கறுப்பு ஜுலைக் கலவரங்கள் இடம்பெற்று 42 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஆனால், இதற்குக் காரணமானவர்கள் இன்னமும் பொறுப்பேற்கச் செய்யப்படவில்லை. கறுப்பு ஜுலைப் படுகொலைகளை தமிழினம் ஒருபோதும் மறக்கவும் போவதில்லை. மன்னிக்கவும் போவதில்லை' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். நிகழ்வு நடைபெற்ற பகுதிக்கு அருகில் யாழ்ப்பாணப் பொலிஸாரும், புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டு நிகழ்வு தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## சகோதரத்துவக்...

தெரிய வருவதாவது:-
கறுப்பு ஜுலைக் கலவரங்களின் நினைவு நாளான நேற்று, தென்னிலங்கையில் இருந்து 'சகோதரத்துவக் குழு' என்ற பெயரில் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தலைமையில் குழுவொன்று வந்திருந்தது. அந்தக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுத்திருந்தனர். இதைத் தொடர்ந்து, அவர்கள் யாழ்ப்பாண நகரப் பகுதியில் குத்தாட்டம் போடும் வீடியோ பதிவுகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

சகோதரத்துவக் குழுவென்று வந்தவர்கள், தமிழ் மக்களுக்கு வேதனையான தினமொன்றில் அவர்களின் மனக்காயங்களை ஆற்றுப்படுத்துவதற்குப் பதிலாக ஆடிப்பாடிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டமை தமிழர்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். தென்னிலங்கையில் இருந்துவந்த குழுவினரின் இந்தச் செயற்பாட்டுக்குப் பலரும் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## அடுத்த...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய ஒற்றுமையையும் சமத்துவத்தையும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக 'இலங்கையர் தினம்' கொண்டாடப்படவுள்ளது. இலங்கையர் தினத்தை எதிர்வரும் 23ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய சமத்துவத்தைக்கட்டியெழுப்புவதற்கானபயணத்தில் புதியதொரு ஆரம்பமாக இலங்கையர் தின நிகழ்வு அமையும். அடுத்த வருடம் ஆரம்பத்தில் மாகாணசபைத் தேர்தலை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை - என்றார்.

இந்த வருடம் தேர்தல் வருடம் என்றும், உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் என்பன இவ்வருடத்துக்குள் நடத்தி முடிக்கப்படும் என்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது. உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கத்துக்கு பின்னடைவு ஏற்பட்டமையைத் தொடர்ந்தே மாகாணசபைத் தேர்தலைபிற்போட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## தவறான...

முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார். உரும்பிராய் பகுதியில் உள்ள தோட்டமொன்றில் இருந்து அவருடைய சடலம் மீட்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணையை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## சம்பூரில்...

துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், நீதிபதி திருமதி தஸ்னீம் பௌசான் நேற்று அங்கு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

இதன்போதே, மனித என்புச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியில் தொடர்ச்சியான அகழ்வுப்பணிகளை மேற்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் ஆராய்ந்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை வழங்குமாறு அவர் உத்தரவிட்டார். (அ-ம-50)

## செம்மணி...

அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 85 ஆக அதிகரித்துள்ளது.

செம்மணிப் மனிதப்புதைகுழியின் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 18ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே புதிதாக ஐந்து என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. கடந்த மூன்று நாள்களில் மட்டும் 20 மனித என்புத் தொகுதிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சிரேஷ்ட சட்டத்தரணிகளான ரணித்தா, சட்டத்தரணி நிறஞ்சன், யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் குமாரவடிவேல் குருபரன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர் ஆகியோர் நேற்றைய அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அவதானிக்கப்...

பாலூட்டும் போத்தல்தான் என்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 17ஆம் நாளான நேற்றுமுன்தினம் அந்தப் போத்தல் அவதானிக்கப்பட்டிருந்தது. அது குழந்தைக்குப் பாலூட்டும் போத்தலையொத்ததாகக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றைய அகழ்வுப் பணிகளின்போது அது குழந்தைக்குப் பாலூட்டும் போத்தல்தான் என்பது முற்றாகத் தெரிந்துள்ளது.

தொடர்ச்சியாக அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அது மீட்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## வடக்கு...

இது தொடர்பில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
வடமாகாணம், வடமத்திய மாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் என்பன கடும் கொந்தளிப்புடன் காணப்படும். நாடு முழுவதும் நிலவும் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி காரணமாக, இந்த மாவட்டங்களில் மணிக்கு 55 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். எனவே, மீனவர்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம் - என்றுள்ளது. (அ-ம-இ)

**தொடர்புடைய செய்தி உள்ளே**

## பிள்ளையானின்...

விசாரணைகளைத் தொடர்வதென நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் (சந்திரகாந்தன்), தான் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. இந்த மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றபோதே, விசாரணைகளைத் தொடர்வதற்கு தீர்மானித்துள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. எனினும், விசாரணையின் அடுத்த தவணை எப்போது என்று நேற்றுக் குறிப்பிடப்படவில்லை. விரைவில் அது தொடர்பான அறிவிப்பு வெளிவரும் என்று கருதப்படுகின்றது.

பிள்ளையானின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா மற்றும் சட்டத்தரணி உதய கம்மன்பில ஆகியோர் முன்னிலையாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## தலைமை...

பிரீத்தி பத்மன் சூரசேனவை நியமிப்பதற்கு ஜனாதிபதி அநுர பரிந்துரைத்த நிலையில், அதற்கு அரசியலமைப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

அரசியலமைப்புச் சபை நேற்றுக் கூடிய போது, ஜனாதிபதியின் பரிந்துரை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்தே இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தலைமை நீதிபதி முர்து பெர்னாண்டோ ஜுலை மாதம் 27ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## மாவிட்டபுரம்...

றது. நேற்றுக் காலை 7.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுகசுவாமி, விநாயகப் பெருமான், வள்ளி தெய்வானை சமேத முத்துக் குமாரசுவாமி, அம்பிகை சமேத சிவன், சண்டேஸ்வரர் ஆகிய தெய்வங்கள் உள்வீதியில் எழுந்தருளி உலா வந்து சித்திரத் தேர்களில் ஆரோகணித்தனர். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் பஞ்சரத பவனி ஆரம்பமாகி இடம்பெற்றது. (அ-ம-26-66)

## கிட்டுப்...

ஒளித்தொகுப்பு வெளியிடப்படவுள்ளது. தொடர்ந்து சிறை வாழ்க்கை உணர் கண்காட்சியும், விடுதலை நீர் சேகரிப்பும் இடம்பெறவுள்ளன. (அ-ம-26-20)

## நாட்டில்...

கறுப்பு ஜுலைக் கலவரங்கள் இடம்பெற்று 42 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கறுப்பு ஜுலை என்பது, அன்று ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியால் தமிழ் மக்களைக் கொல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சதிச்செயலேயாகும். அது நாட்டின் வரலாற்றையே மாற்றியது. ஜே.ஆர். - ரணில் எல்லோரும் சேர்ந்து ஏற்படுத்திய அந்தக் காயம் இன்னும் ஆறவில்லை. இந்த நாட்டை ஐம்பது, நூறு வருடங்களுக்கு முன்னேற்ற முடியாதவாறு சீரழித்த நாள் தான் கறுப்பு ஜுலை.

அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். அதிகமான தமிழர்கள் நாட்டைவிட்டு ஓடினார்கள். சிறிய அமைப்பாக இருந்த புலிகள் இயக்கம் பெரியளவில் வளர்ந்தது. புலிகளை பலப்படுத்துவதற்கு இந்தியா தலையிட்டது. இதன் விளைவாக அனைத்து இனங்களையும் சேர்ந்த அப்பாவி இளைஞர்களும், யுவதிகளும் ஆயிரக்கணக்கில் பலியாகினர். ஐக்கிய தேசிய கட்சி தொடர்ச்சியாக ஆட்சி அதிகாரத்தில் இருப்பதற்காகவே ஜே.ஆர். இந்த அநியாயங்களைச் செய்தார். மறுபுறம், அந்தப் பழியைத் தூக்கி வேறு நபர்களின் தலையில் போட்டார். அப்பாவி பலியான கட்சிதான் ஜே.வி.பி. நாங்கள்தான் இந்தக் கொடூரங்களைச் செய்தோம் என்று பொய்கூறி எம்மைத் தடை செய்தார். நாம் அப்போது வளர்ந்து வந்த இடதுசாரிக் கட்சி. இந்தக் கலவரங்களை இந்தியா சரிவரப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளைப் பலப்படுத்தியது - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
28
.
02
.
1935

இறைவன் அடியில்
31
.
07
.
2019



அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் செல்லத்துரை கணபதிப்பிள்ளை

(முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.)

திதி: ஆடி அமாவாசை (24.07.2025)

எங்கள் அப்பா .....
ஆண்டுகள் ஆறு கடந்தாலும் ஆறாது உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் நித்தமும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்
நீங்கள் தான் எமக்கான வழிகாட்டி
நீங்கள் காட்டிய பாதையில் நாம் பயணிக்கிறோம் உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி
உங்கள் ஆத்மா அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் பாதங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

"செந்தில்"
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (CR/45610)J-1

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
31
.
12
.
1946

மறைவு
22
.
07
.
2025



## சிதம்பரப்பிள்ளை சிவராசலிங்கம்

(A.S.S சுருட்டு உரிமையாளர்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கு தியேட்டர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சிவராசலிங்கம் அவர்கள் கடந்த (22.07.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், கார்த்திகா (கனடா), கோபிகா (அவுஸ்திரேலியா), விஷ்ணுகா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலேந்திரன் (கனடா), கஜேந்திரன் (அவுஸ்திரேலியா), பிரதீஷன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் நேசமலர் (கனடா), ஞானமலர் (கனடா), பரமசிவம் (கனடா), பரமேஸ்வரி (பத்மா), சிவயோகராணி, காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், லயா, லக்ஷ்மி (கனடா), அஞ்சனா, அக்ஷரா (அவுஸ்திரேலியா), வைஷாலி, ரிஷாலி (கனடா) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசையா, தம்பிமுத்து, சண்முகராஜா, விஜயலக்ஷ்மி, சங்கீத பூசணம் சிவஞானசேகரம் மற்றும் பேராயிரவர், காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம் மற்றும் செல்வராஜா, அரியரத்தினம் மற்றும் யோகேஸ்வரன், ஜெயமலர், ஸ்ரீகாந்தன், ஸ்ரீசண்முகராஜா, பாமினி, தயாபரன், பிரபாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.07.2025) வெள்ளிக்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 197 5168

தியேட்டர் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில். (CR/45608) J-1

# தவறான தகவல் வெளியிட்ட பிமல் பதவி விலகவேண்டும்

### வலியுறுத்துகின்றார் கம்மன்பில

கொழும்பு, ஜூலை 24

அருட்தந்தைசிறில்காமினிபெர்னாண்டோ கூறுவது உண்மையெனில் சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க பதவி விலக வேண்டும் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பேராயரின் கோரிக்கைக்கு அமையவே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ரவி செனவிரத்ன நியமிக்கப்பட்டார் என சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். 7 மாதங்களுக்கு முன்னர் நான் தெரிவித்த கருத்தையே அமைச்சர் வெளிப்படுத்தி இருந்தார். அதற்காக அவருக்கு நன்றிகள். ஆயினும் அவ்வாறு கோரிக்கை எதுவும் விடுக்கவில்லை என கத்தோலிக்க சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அப்படியானால் பேராயர் தொடர்பில் தவறான தகவலை வெளியிட்டுச் சபையைத் தவறாக வழிநடத்தியமைக்காக சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க பதவி விலகவேண்டும்.

சிலவேளை பிமல் ரத்நாயக்க கூறுவது உண்மையெனில் தவறான தகவலை சமூகமயப்படுத்தியதற்காக அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ பதவி விலக வேண்டும். எது எப்படி இருந்தாலும் இருவரில் ஒருவர் கூறுவதுதான் உண்மையாக இருக்கமுடியும் - என்றார். (ஏ-44)

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

# அரசால் 3,15,000 கிலோ நெல் சிறுபோகத்தில் கொள்வனவு

முல்லைத்தீவு, ஜூலை 24

சிறுபோகச் செய்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 3 இலட்சத்து 15 ஆயிரம் கிலோகிராம் நெல் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையினர் தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு திம்பிலிப் பகுதியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியத்திலும் முள்ளியவளையில் அமைந்துள்ள களஞ்சியத்திலும், ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள களஞ்சியத்திலும் இருந்து நெல் கொள்வனவு இடம்பெற்றுவருகின்றது. நாடு சிகப்பு மற்றும் வெள்ளை கிலோ 120 ரூபாவுக்கும் சம்பா 125 ரூபாவுக்கும் கீரிச் சம்பா 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது. (ச-19-35)



# நட்புகளின் சங்கமம் ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 24

மட்டக்களப்பு அரச ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கற்ற கிளிநொச்சி மாவட்ட பழைய மாணவர்களின் 25 ஆவது வருட நட்புகளின் சங்கமம் ஒன்று கூடல் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும் என மாவட்ட கலாசாலை நண்பர்கள் அறிவித்துள்ளனர். (ச-25, 9)

# பற்றிக்ஸ் கல்லூரியில் பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 24

புனித பற்றிக்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு மத்தியூஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தலைவராக யாழ்ப்பாண ஆயர் ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம், தலைமை விருந்தினராக மன்னார் ஆயர் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை, கௌரவ விருந்தினராக இலங்கை சட்டக் கல்லூரி மனிதவள மேம்பாட்டு (கர்னல்) வழக்கறிஞரும் சட்ட ஆலோசகரும் எம்&டி சட்ட அறைகள், கொழும்பு வருகை விரிவுரையாளருமான மரியதாஸ் ஜூட் தினேஷ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

## வாடகைக்குத் தேவை

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிக்குள் கடை வாடகைக்குத் தேவை.
KKS Road, பலாலி றோட் விரும்பத்தக்கது.
1 பரப்பு காணியும் வாடகைக்கு தேவை

(CS 58923) E

தொடர்பு: 077 076 5135

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.